Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 01 திங்கட்கிழமை (17.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 21

# நாடாளுமன்றை இடைநிறுத்தும் அறிவிப்பு எந்நேரமும் வரலாம்!

## அதன் பின்னர் அமைச்சரவையில் மாற்றம்

கொழும்பு, டிசம்பர் 17

நெருக்கடி மிகுந்த வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பை ஒருவாறு சமாளித்து, பெரும் வாக்கு வித்தியாசத்தில் அதில் அரசு வெற்றி கொண்டதை அடுத்து, விரைவில் நாடாளுமன்றை இடைநிறுத்தவும், (Prorogation Of Parliament) அமைச்சரவையில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வரவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கின்றார் என்று அறியவருகின்றது.

எந்நேரமும் நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படலாம் எனத் தெரிகின்றது.

அரசமைப்பின் 70(1), (3), (4) மற்றும் (5) ஆம் பிரிவுகளின் கீழ் ஜனாதிபதி தமக்கு விரும்பிய நேரத்தில்நாடாளுமன்றத்தைஇடைநிறுத்தி மீண்டும் கூட்டுவதற்கு அதிகாரமுடையவராவார்.

அவ்வாறு இடைநிறுத்தும் உத்தரவை ஜனாதிபதி விடுக்கும்போது, இரண்டு மாதத்திற்கு மேற்படாத ஒரு நாளில் மீண்டும் நாடாளுமன்றம் கூடுவதற்கான திகதியையும் அந்த உத்தரவில் அவர் குறிப்பிட வேண்டும் என அரசமைப்பின் 70(3) ஆம் பிரிவு கூறுகின்றது.

நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் கூடும்போது அந்தக் கூட்டத்தொடரை ஜனாதிபதி ஆரம்ப உரை நிகழ்த்தித் தொடக்கி வைப்பார்.

அதேசமயம், நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படும்போது, அதுவரை செயலில் இருந்த நாடாளுமன்றக் குழுக்கள் செயல் இழந்து விடும் என்பதும் -

மீண்டும் புதிதாக நாடாளுமன்றம் கூடும்போது, நாடாளுமன்ற உப குழுக்களை நாடாளுமன்றமே திரும்பவும் புதிதாக நியமிக்க வேண்டும் எனபதும் - குறிப்பிடத்தக்கவை.

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட முதலாம் தர நீதிபதியாக இ.த. விக்னராஜா நியமனம்

யாழ்ப்பாணம், டிச.17



யாழ். மாவட்டத்தின் முதலாம் தர மாவட்ட நீதிபதியாக இ.த.விக்னராஜா பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் சரத் நந்தன சில்வா தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழு இந்தப் பதவி உயர்வு நியமனத்தை வழங்கியுள்ளது. இம்மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

98ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்ட நீதிபதியாகவும் யாழ். நீதிமன்ற நீதிவானாக

(8ஆம் பக்கம் பார்க்க)



## புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கும் வரை அவர்கள் மீதான தாக்குதல்கள் தொடரும்

### இராணுவத் தளபதி சொல்கிறார்

கொழும்பு, டிச. 17

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைக்கும் வரைக்கும் அவர்கள் மீதான இராணுவத்தினரின் தாக்குதல்கள் தொடரும்; நிறுத்தப்படமாட்டாது.

அது மட்டுமன்றி எதிர்காலத்தில் எமது தாக்குதல்கள் வேகம் அடையும்.

பல முனைகளில் தாக்குதல் நடத்தி வடக்கை மீட்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகா.

'லங்காதீப' வார இதழுக்கு வழங்கியிருக்கும் பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டெடுத்த படையினர், தற்போது மும்முனைகளில் தாக்குதல்களை நடத்தி வடக்கை மீட்கும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் தாக்குதல் நடவடிக்கைகள் வேகமடையும். வடக்கை மீட்கும் நாள் மிகத்தொலைவில் இல்லை.

இராணுவத்தின் பலம் இப்போது அதிகரித்துள்ளது. விடுதலைப் புலிகளை பல வீனப்படுத்தி அவர்களை வன்னியில் ஒரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## வான் தாக்குதலில் பிரபாகரன் காயம் என்ற செய்திக்கு மறுப்பு

கொழும்பு, டிச.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கடந்த 28ஆம் திகதி கிளிநொச்சி ஜெயந்தி நகரில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் சிறிய காயங்களுக்கு ஆளானார் என்று கொழும்பில் வெளியான பரபரப்புத் தகவலை வன்னிச் செய்திகள் அடியோடு மறுத்தன.

''அப்படி எதுவுமே நடக்கவில்லை. இது இலங்கை அரசின் பாதுகாப்புத் தலைமைகட்டவிழ்த்து விட்டிருக்கும் உளவியல் யுத்தத்தின் ஓர் அங்கம். தாம், தலைவர் பிரபாகரனை நெருங்கிவிட்டார்கள் என்ற கதையைப் பரப்புவதன் மூலம் குழப்பத்தை ஏற்படுத்த எண்ணும் கொழும்பு, அதற்காகவே இந்தக் கதையை விதைத்து விட்டிருக்கின்றது'' - என விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

### இலங்கைக்கு வருகை தந்துள்ள

## ஐ.நா. செயலாளரின் பிரதிநிதி வன்னி செல்ல அனுமதி இல்லை

கொழும்பு, டிச. 17

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், மற்றும் அகதிகளின் மனித உரிமைகள் தொடர்பான - ஐ.நா. செயலாளர் நாயகத்தின் - விசேட பிரதிநிதி வோல்டர் கலின் தற்போது இலங்கை வந்துள்ளார். அவர் வன்னிக்குச் செல்வதற்கு விடுத்த வேண்டுகோளை அரசு நிராகரித்துள்ளது.

மோசமடைந்து வரும்மனித உரிமை நிலைவரம் குறித்து மதிப்பிடுவதற்காகத் தாம் வன்னிக்கும் யாழ். குடாநாட்டிற்கும் செல்வதற்கு விரும்புகிறார் என அவர் தெரிவித்திருந்தார்.

எனினும் வன்னிக்கான விஜயம் தொடர்பான அவரது வேண்டுகோளை நிராகரித்துள்ள அரசு, யாழ். குடாநாட்டிற்கு அவர் செல்வதற்கான ஏற்பாடு

(8ஆம் பக்கம் பார்க்க)

### வரவு - செலவுத் திட்ட வேளையில்

## இராணுவ வெற்றிகளை அரசாங்கம் அரசியலாக்கியதாக ஜே.வி.பி. கண்டனம்

முப்படையினர் ஈட்டிய இராணுவ வெற்றிகளை, வரவு - செலவுத்திட்ட வேளையில் அரசாங்கம் அரசியலாக்கிக் கொண்டதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. இவ்வாறு கண்டித்தது.

கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் நேற்று செய்தியாளர் மாநாட்டை நடத்தினர்.

மூன்றாவது வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெறுவதற்கு - அது தோல்வியடையாமல் காப்பாற்றுவதற்கு - உதவி செய்த மூன்றாம் நாளில் நடத்திய மாநாட்டில் ஜே.வி.பி. தனது தட்டை மீண்டும் மாற்றிக்கொண்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுக் காயங்களுடன் கைதடியில் இரு சடலங்கள்

யாழ்ப்பாணம், டிச.17

கைதடி வடக்கு, மாவடி மூலையில் இருவரின் சடலங்கள் வெட்டுக் காயங்களுடன் நேற்றுக் காலை மீட்கப்பட்டன.

35 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமும் 22 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமுமே மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ். கணபதிப்பிள்ளை சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலங்களை பிரேத பரிசோதனைக்காகவும் அடையாளம் காண்பதற்காகவும் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சடலங்களில் ஒன்று தலையில் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்டது. மற்றைய சடலம் கழுத்து வெட்டப்பட்டு துண்டாகிய நிலையில் காணப்பட்டது.

சடலங்கள் சாவகச்சேரி பொலிஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுப் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டன.

(அ-1-15-275)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நெடுந்தீவைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழக
இசைப் பட்டதாரி சங்கீத பூஷணம்


**வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்**

*அவர்கள் 15.12.2007 அன்று "கலாபூஷணம் விருது" பெற்றமைக்காக வாழ்த்துவதுடன் நிறைந்த ஆரோக்கியமும் நீடிய ஆயுளும் பெற்று வாழ இறைவனை வேண்டுகின்றோம்.*

112/9, கச்சேரி நல்லூர் வீதி,
தூசையப்பர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். **காந்தரூபன் குடும்பத்தினர்.** (69062)

## ஈராண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 18 ★ 12 ★ 1955



நோயின் பிடியில் 17 ★ 12 ★ 2005

### அமரர் கதிர்காமு முருகேசு
(சிவபாதம்)

பாசத்தின் உறைவிடமே!
பாரினிலே நாம் வாழ பல வழிகள் செய்தவனே
சோகத்தில் நாம் இங்கு சோர்ந்து துடிக்கின்றோம்
தூயவனே!
ஆளாகும் வரை அருகிருப்பேன் என்று சொல்லி
மீளாத்துயில் கொள்ள மனமிங்கு வந்ததுவோ
ஈராண்டுகள் சென்றதையா,
ஈசனுடன் நீயிருந்து எங்களையும் காத்தருள்வாய்

நாகர்கோயில் கிழக்கு,
நாகர்கோவில். (68934)
உன் ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்து நிற்கும் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 02 - 1928



மறைவு 27 - 12 - 2006

### திருமதி கந்தையா மகேஸ்வரி

திதி: 17.12.2007

அன்போடும் பாசத்தோடும் எமை வளர்த்து
அவனியில் நாமுயர அரும்பாடுபட்டீரே!
ஆண்டொன்று கடந்து போனாலும்
ஆறாது அம்மா எங்கள் மனக்கவலை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

*24, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.* (68953)
**பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் சிதம்பரப்பிள்ளை மாணிக்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய முன்னாள் பரிபாலனசபைத் தலைவர்)

தோற்றம் 07 . 11 .1918
மறைவு 17 . 11 . 2007

திதி:- 17.12.2007

**"பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வாழ்ந்து எம்மை விட்டுப்
பிரிந்த அன்புத் தெய்வமே"**

*உங்கள் ஆத்மா சாந்திபெற ஸ்ரீ முத்துமாரியம்பாளின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்.*

கடந்த 17.11.2007 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியைகளின் போது சகலவழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி தொலைநகல்கள் பத்திரிகை வாயிலாக அனுதாபச்செய்திகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்கள், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள், ஆறுதல் செய்தி அனுப்பியவர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் சகலவழிகளிலும் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.* (68054)
குடும்பத்தினர்.

## கோப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை ஒளி விழா நிகழ்வு

கோப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா நிகழ்வு நாளை செவ்வாய்கிழமை காலை 9 மணி முதல் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலரும், நலன்புரிச் சங்கத் தலைவருமான சி.ஏ மோகன் தாஸ் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெறும். .(1)


## BARATHY
சித்தன்கேணி

### A/L 2009, 2008
### CHEMISTRY

★ சேதன இரசாயனம்
★ பௌதிக இரசாயனம்
★ Paper Class

புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
ஆசிரியர் : **T.Paraparan**
[B.Sc.(Cey.), M.Sc(Cey.), Chemistry (Spl)]
அனுமதியினை பெற்றுக்கொள்ளவும்
மாணவர்களுக்கு ஏற்ப நேர மாற்றங்கள் செய்யப்படும்.
Note: A/L 2009, 2008 இணைந்த கணிதம் புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
ஆசிரியர் : விஜேந்திரன் B.Sc.(Cey)


## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீராம் கலாவல்லி

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீராம் கலாவல்லி அவர்கள் 14.12.2007 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் திருநாவுக்கரசு ஸ்ரீராம் அவர்களின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு - பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருநாவுக்கரசு - கனகலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற ச.முத்தையா (ஆசிரியர்) அவர்களின் பெறாமகளும், க.அன்னபூரணம் அவர்களின் மருமகளும், தி.சிவகுமாரன், தி.ஸ்ரீஸ்கந்தகுமாரன், பி.சிவாஜினி, மு.சுதர் ஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அ.பிரதாபன், ப.முரளி, சி.இந்திராணி, ஸ்ரீ.சாமினி, ம.புவனேஸ்வரி, ரா.நகுலேஸ்வரி, தி.ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனியும், ஸ்ரீ.தேவராணியின் உடன்பிறவாதச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2007) திங்கட்கிழமை கம்பளையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
தி.சிவகுமாரன் *(சகோதரன்),*
அ.பிரதாபன் *(மைத்துனன் - உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்).*

**கம்பளை.**
T.P.081 5622533 (69063)

### எட்வின் தேவநாதன் பிலிப்ஸ் (E.D.PHILIPS)



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வு, மொறிஸ் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட எட்வின் தேவநாதன் பிலிப்ஸ் நேற்று (16.12.2007) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகிவிட்டார்.

அன்னார் திரேசா பொன்றோசின் அன்புக் கணவரும் S.A.K.பிலிப்ஸ் (ஜெய்ப்பூர், சுண்டுக்குளி), லோகநாதன் (ஜேர்மனி), அனற்ரஞ்சிதம், பியற்றி சவுந்தரராணி(சவுந்தா-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிறிஸ்ரீனா (வசந்தா), ரஞ்சிதம்(ஜேர்மனி), செல்லப்பா (கொழும்பு), நவநீதன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களான ஜோன் பஸ்ரியன், ஜெகத்தியாகன் மற்றும் வசந்தன்(அமெரிக்கா), ராகுலன், வனஜா, டில்றுக்ஷி, பிறேமிக்கா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (17.12.2007) திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**இந்திரன் குடும்பத்தினர்.**
100/A, [illegible] லேன்,
[illegible] பாண்டியன்தாழ்வு.

## 9 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் சின்னத்துரை நடராசா

தோற்றம்: 05★06★1929
மறைவு: 05★01★1998

திதி:பூர்வபக்க அட்டமி

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட அன்புத்தெய்வமே - அப்பா!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை எம்துயரம்
எங்கள் உயிர் இருக்கும்மட்டும் உங்கள் நினைவிருக்கும்...

இணுவில் தெற்கு,
இணுவில் (அ/54732)
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்புள்ளங்கள்*
மனைவி, மக்கள், மருமக்கள்.

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நவாலியைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் நாகர் பத்மநாதன்
(ஆசாரி சின்னக்கண்டு)

தோற்றம் 15 .01 .1938.
மறைவு 28 .12 .2006

திதி: 17.12.2007

வாழ்க்கை எனும் வானத்திலே
வந்துதித்த முதல் நிலவே எங்கள் அண்ணா
மண்ணுலகம் முழுவதும் மைத்துனராய் - யான்
புலம்புவது கேளாயோ
மாமா என மருவியெங்கள்
தந்தையாகி எந்தவிடம் சென்றாயோ - ஏன்எம்மை
பிரிந்து துயர் செய்தாய் நீயே.

காளிகோவிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
*என்றும் உங்கள் நினைவுடன்*
செ.இராசரத்தினம்(மைத்துனர்),
இராமணி (சகோதரி - வவா), மருமக்கள். (68936)

## மரண அறிவித்தல்கள்

*'சங்கீத வித்துவான்'*

### அப்புக்குட்டி திலகேஸ்வரன்(டென்மார்க்)

(முன்னாள் இசைத்துறை ஆசிரியர், யா/மகாஜனகல்லூரி, தெல்லிப்பழை)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வளலாயை வசிப்பிடமாகவும், தற்போது டென்மார்க்கில் வசித்தவருமான அப்புக்குட்டி திலகேஸ்வரன் டென்மார்க்கில் 10.12.2007 திங் கட்கிழமை இறையடி சேர்ந்து விட்டார்.

அன்னார் அமரர்களாகிய அளவெட்டியூர் அப்புக்குட்டி - கனகம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும், வளலாயூர் அமரர்கள் சிவப்பிரகாசம் - அம்மாப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் பூம்பாவை (கிளி - டென்மார்க்) ஆருயிர் கணவரும், சுமுகன் (டென்மார்க்), மயூரன்(டென்மார்க்), சுமங்கலி(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுஷா(டென்மார்க்), டுஷிதா(டென்மார்க்), பிரஷாத்(டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சோழன் (டென்மார்க்), விஷேதன்(டென்மார்க்) ஆகியோரது பாசமுள்ள பேரனும், பரமேஸ்வரி(சிங்கப்பூர்) காலஞ்சென்ற மகேஸ்வரி(முன்னாள் ஆசிரியை, யா/அளவெட்டி அருணோதயா), கந்தையா(கனடா), காலஞ்சென்ற சோமசுந்தரம்(முன்னாள் உள்வரவு வெளியகல்வு திணைக்கள அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைசாமி (இளைப்பாறிய ஆசிரியர், கல்வயல்), ஸ்ரீஸ்கந்தராசா(கிராம அலுவலர், சிறுப்பிட்டி கிழக்கு), காலஞ்சென்ற சுரேஷ், பாலகிருஷ்ணன்(கனடா) ஆகியோரின் சகலனும், சரோஜினிதேவி (கல்வயல்), பத்மநாதன்-இராசமலர் (இடைக் காடு), மல்லிகாதேவி(சிறுப்பிட்டி), ரதிலட்சுமி(கனடா), அமிர்தகௌரி(கனடா), ஸ்ரீகுகன்-சிவமலர்(கனடா), ஸ்ரீபவன்-பவுகுமாரி(லண்டன்) ஆகி யோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2007) திங்கட்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டென்மார்க்*
T.P: 004546928006
004546928096

தகவல்:
க. ஸ்ரீஸ்கந்தராஜா(சகலன்)
(கிராம அலுவலர், சிறுப்பிட்டி கிழக்கு).

### கதிர்காமத்தம்பி செல்லப்பாக்கியம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி செல்லப்பாக்கியம் 15.12.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி (சின்னண்ணை)யின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை(விதானையார்) - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, ஜனகம்மா, மார்க்கண்டு, கனகசபாபதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற மகேந்திரன் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) மற்றும் பாக்கியலீலா, தனேந்திரன் (யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பவியலாளர்), கலையரசி (லண்டன்) ஆகியோரின் தாயாரும் புனிதமலர், விஜயானந்தன் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், வலி.வடக்கு பிரதேச சபை), சிவராணி, சிவகுமார் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற வத்சலா மற்றும் செந்தில்குமார் (ஜேர்மனி), குலமதி (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தாயாரும் ரஜீவி, கலாதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் மதுவந்தி (யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவி), மதுசன், மதுசந்தர், துரைராஜன் (யா/கொக்குவில் இந்து கல்லூரி மாணவன்), சிவபரன் (யா/ஜோன் பொஸ்கோ மாணவன்) கஜானன், அபிஷேகன், ஆரணன், செந்நிலானி, செந்தூரி, செந்துஜன், செஞ்ஜீவ், கஜனவி, கஸ்தூரி, சாருசன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கணபதிப்பிள்ளை, அன்னபூரணம், செல்லம், சிவசம்பு (விதானையார்), தெய்வானைப்பிள்ளை, முத்துவேலு, அப்பாத்துரை, அன்னப்பிள்ளை, வைரமுத்து ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இணுவில் மேற்கு கந்தசுவாமி கோவிலடி அன்னாரது இல்லத்தில் நேற்று (16.12.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு.* (69061)

தகவல்:
ச.க.தனேந்திரன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேச மின்விநியோகத்திற்காக நிதி ஒதுக்கியும் வேலைகள் ஆரம்பமாகவில்லை

## அப்பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் மின்சார விநியோகம் வழங்கவென நிதி ஒதுக்கப்பட்டும் இதுவரை வேலைகள் ஆரம்பமாகவில்லையென பொதுமக்கள் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் கடந்த வருடமும் இவ்வருடமும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் மின்சார விநியோகத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்து வேலைத் திட்டங்களும் 'கமநெகும' அபிவிருத்தித் திட்டத்தில் அல்லாரை செல்வா குடியிருப்பு மின்சார விநியோகத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ள போதிலும்இதுவரை மின்சார சபையினால் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

டிசெம்பர் மாத முடிவுக்குள் வேலைகள் ஆரம்பிக்காவிடின் நிதி திரும்பிச் செல்லும் நிலை ஏற்படலாமென தெரிவித்தனர். (1-207)

# ஓய்வூதியர்களுக்கு புதுவருட வாழ்த்துமடல்

நவாலி,டிசெ.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இம்மாத ஓய்வூதிய வவுச்சருடன் நத்தார் புதுவருட வாழ்த்துக்களையும் அடுத்த ஆண்டிற்கான ஓய்வூதிய திகதிகளையும் அனுப்பி வைத்துள்ளது.

மேலும் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கடிதத்தின் படி கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக வாழ்க்கை அத்தாட்சிப் பத்திர படிவமொன்றையும் இவற்றுடன் இணைத்து அனுப்பிவைத்துள்ளது. (1-100)

# குடாநாட்டில் பணியில் இருப்போரை விட கிராம சேவையாளர் வெற்றிடங்களே அதிகம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கிராம அலுவலர்களை விட வெற்றிடமாக உள்ள கிராம அலுவலர்களின் பதவி எண்ணிக்கை அதிகமென கணக்கிடப்பட்டுள்ளது.

வெற்றிடமாக உள்ள கிராம அலுவலர் பதவிகள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ளதால் தற்போது பணியில் உள்ள பெரும்பாலான கிராம அலுவலர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் பதில் கடமை புரிய நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டுக்கும் மேற்பட்ட பிரிவுகளில் ஒரு கிராம அலுவலர் பணிபுரிவதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




பிரதி புதன்கிழமைகளில் பிரதேச செயலகங்களுக்கு வந்து கிராம அலுவலர்களைச் சந்திக்கவேண்டிய நிலை பொதுமக்களுக்கு ஏற்படுகிறது. கிராம அலுவலர்கள் புதன்கிழமைகளில் பிரதேச செயலங்களுக்கு சமுகமளிக்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளபோதிலும் கிராம அலுவலர்கள் தாம் நினைத்த நேரத்தில் பிரதேச செயலகத்திற்கு வருகை தருவதால் பொதுமக்கள் நீண்டநேரம் கால் கடுக்க பிரதேச செயலகத்தில் காத்திருக்க வேண்டியுள்ளதாக முறையிடப்படுகிறது. (207)

# ஆனைக்கோட்டையில் 'எயிட்ஸ்' விழிப்புணர்வு

நவாலி,டிசெ.17

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவின் சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் ஏற்பாட்டில் எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த 7 ஆம் திகதி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ந.சிவகடாட்சம், சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவன திட்ட உத்தியோகத்தர் அ. சர்மிளா பொதுச் சுகாதார பரிசோதகர் வை.பிறேம்குமார், கள உத்தியோகத்தர் ஜே.அசோக் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். (100)

# பெப்ரவரியில் கொழும்பில் கண்காட்சி; வடக்கையும் பங்குபற்ற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.17

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ள தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் வடக்கு மாகாணத்தின் திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளையும் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

'கயட்ட கிரில்ல' எனும் தலைப்பிலான தேசிய அபிவிருத்தி கண்காட்சி(2008) எதிர்வரும் பெப்ரவரி மாதம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பெப்ரவரி 4ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் சகல அரச திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள் கலந்துகொள்ளவேண்டும் என்றும் வடக்கு மாகாண பிரதம செயலர் எஸ்.ரங்கராஜன் கோரியுள்ளார்.

'கயட்ட கிரில்ல' எனும் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் வடமாகாண சபையின் கண்காட்சிகளுக்கு பிரத்தியேகமான கூடம் ஒன்று ஒதுக்கப்படவுள்ளது.

இதில் சுகாதாரம், விவசாயம், உள்ளூராட்சி, வீதி, நீர்ப்பாசனம், கல்வி சமூக சேவைகள், கால்நடை உற்பத்தி, சுகாதாரம், உல்லாசப் பிரயாணம், கைத்தொழில், கிராம அபிவிருத்தி, மீன்பிடி, புனர்நிர்மாணம், கூட்டுறவு மற்றும் வெளிநாட்டு உதவித் திட்டத்துடன் இயங்கும் நெக்டெப், நீக்கொட், நியாப், நிகாப், ஆகியன பங்கெடுக்கவுள்ளன.

மேற்படி 'கயட்ட கிரில்ல' தேசிய கண்காட்சியில் வடமாகாணத்தில் உள்ள சகல அரசாங்க திணைக்களங்களும் வினைத்திறனுடன் செயலாற்றி பங்கேற்க வேண்டும் என பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் கேட்டுள்ளார்.

. எதிர்வரும் ஜனவரி(2008) 24ஆம் திகதி உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு முன் ஆயத்தம் செய்யப்பட வேண்டும். பின்னர் பெப்ரவரி முதலாம் திகதி திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு போக்குவரத்து ஒழுங்கு ஊடாக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு ஒழுங்கு செய்யப்படும். (1-95)



அல்லாரை ஐங்கரன் முன்பள்ளியில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் தின விழாவில் முன்பள்ளி சிறார்களும், ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற முன்பள்ளியின் பழைய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களுடன் கௌரவிக்கப்பட்ட மாணவர்களை படத்தில் காணலாம்.

# கொழும்பு, கட்டுநாயக்க வான்பரப்பில் தாக்குதலுக்கு எதிரான பயிற்சி ஒத்திகை

## தலைநகர மக்களை பீதிக்கொள்ள வைத்த சம்பவம்

கொழும்பு,டிசெ.17

கொழும்பு மற்றும் கட்டுநாயக்க போன்ற முக்கிய பாதுகாப்பு அமைப்புகளைக் கொண்ட பிரதேசங்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் திடீரென விமானத் தாக்குதல் எதனையும் நடத்தும் பட்சத்தில், அதனைச் சாதுரியமாக எதிர்த்து சமாளிப்ப தற்கான உத்திகளையும் பயிற்சிகளையும் விமானப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பயிற்சியின் ஒரு பகுதி கடந்த புதன்கிழமை கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்டு பரீட்சிக்கப்பட்டதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் அரசியல் மற்றும் இராணுவ கள நிலை விமர்சகர் இக்பால் அத்தாஸ் தமது வாராந்தக் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ள மேலும் சில முக்கிய தகவல்கள் வருமாறு-

கொழும்பு நகரின் சில பகுதிகளிலும் கட்டுநாயக்கவிலும் வாழ்கின்ற மக்கள் கடந்த புதன்கிழமை இரவு பெரும் பீதிக்கும் களேபரத்துக்கும் உள்ளானார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் ஒரு தாக்குதலை நடத்தப்போகிறார்களோ என்று மக்கள் பீதியடைந்தார்கள்.

தொலைபேசிச் செய்திகள் பறந்தன. மக்கள் ஒருவரை ஒருவர் தொடர்பு கொண்டு என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள அந்தரப்பட்டார்கள்.

உண்மைத் தகவல் வெளிவரும்வரை இந்த நிலைமை நீடித்தது. அது புலிகளின் வான் தாக்குதல் அல்ல அவ்வாறான தாக்குதல் எதுவும் நடப்பதைத் தவிர்ப்பதற்கான பயிற்சியே இடம்பெற்றது என்பது சிறிது நேரத்தில் தெரியவந்தது.

விமானப்படையைச் சேர்ந்த விமானமொன்று விடுதலைப் புலிகளின் விமானம் போன்று பாவனை செய்துகொண்டு கொழும்பை நோக்கி தாழ்வாகப் பறந்து வந்தது பாதுகாப்புப் படையினரின் முழு ஆதரவுடனேயே இது நடைபெற்றது. இராணுவத் தலைமையகத்தின் மேலாக அந்த விமானம் வந்தவுடன் அடையாளம் காண்பதற்கான மின்வெளிச்சங்கள் அதன் மீது அடிக்கப்பட்டன.(Search Lights) விமானம் ஒருசுற்று சுழன்றடித்து விட்டுத் திரும்பிச் சென்றது. ஏற்கனவே இதேவிதமான பயிற்சியொன்று கட்டுநாயக்கா பகுதியிலும் பரிசோதிக்கப்பட்டது.

தேடிக்கண்டுபிடிக்கும் மின்வெளிச்சங்களால் ஊடுருவிய விமானங்கள் உடனுக்குடன் கண்டுபிடிக்கப்பட்டன.

விமானப்படையின் புதிய சகல மட்ட கட்டளைத் தளபதி வான் கொமடோர் ககான புளத்சிங்கள இந்தப் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்துள்ளார்.

### ஏவுகணைகளால் தாக்கப்படும்

இந்த ஏற்பாட்டின்படி புலிகளின் விமானங்கள் மின்வெளிச்சங்களால் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அவைகளை நோக்கி குண்டுகள் பறக்கும். விமான எதிர்ப்பு பீரங்கிகள் மட்டுமன்றி நிலத்திலிருந்து ஆகாய நிலைகளைத் தாக்கும் ஏவுகணைகளாலும்(Missile) அவ்விமானங்கள் தாக்குதலுக்குள்ளாகும்.

இலங்கை இராணுவம் தனது 59 ஆவது கட்டளைப்பிரிவு ஒன்றை விரைவில் சேர்த்துக்கொள்ளவிருக்கின்றது. 'பயங்கரவாதத்தின் மீதா[illegible] கொள்கைப்படி அமைக்கப்படும் அந்தக் கட்டளைப் பிரிவின் எண்ணிக்கை இதனுடன் 13ஆக உயரும். இந்தப் பிரிவில் செயலாற்றும் கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் டபிள்யூ.பி.ஜயசுந்தர இருப்பார்.

விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல்களை தவிர்ப்பதற்கான பயிற்சிகள் இலங்கையில் மட்டுமன்றி தென்னிந்தியாவிலும் நடைபெறுகிறது. அங்குள்ள பாதுகாப்பு அமைப்புகள், அணு மின் உலைகள் போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகளும் நடைபெற்றிருப்பதாகத் தெரியவந்துள்ளது. இந்திய இராணுவம் இவ்வாறான பயிற்சிகளுக்கு இடத்துக்கிடம் நகர்த்தக் கூடிய ராடர் அமைப்புகள் மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்புக்களையும பயன்படுத்தியிருக்கின்றது.

எண்ணெய்க்கப்பல்கள் மற்றும் இலங்கைக்கருகில் சர்வதேசக் கடற்பகுதியில் பயணிக்கும் பெரும் சரக்குக் கப்பல்களைப் பாதுகாப்பதும் இந்திய இராணுவத்தின் நோக்கம் என்று தெரிகின்றது.

### இந்திய உயர்மட்ட பாதுகாப்புக் குழு இலங்கை வருகின்றது

இந்திய பாதுகாப்பு உயர்மட்டக் குழுவொன்று இந்த வாரம் இலங்கைக்கு வர விருப்பதாகத் தெரியவந்துள்ளது. மூன்று நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இக்குழுவினர் விமான பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான விடயங்கள் பற்றி ஆராய்வர் என்று தெரிகின்றது. இரு நாடுகளுக்குமிடையில் இருந்துவரும் பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றியும் இக்குழுவினர் ஆய்வு [illegible] இங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவர்கள் கலந்தாலோசனை நடத்துவர்.

இந்தப் பின்னணியில்தான் இலங்கையின் விமான பாதுகாப்புக்கு அடையாளப் படுத்தப்பட்ட வலயம் ஒன்றை பிரகடனப் படுத்துவதற்கான புதிய விதிகள் சிலவற்றை இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இலங்கைக் கரையிலிருந்து 12 கடல் மைல் தூரத்தை ஆட்புல பிரதேசமாக இலங்கை அறிவித்துள்ளது. இது றுகுணு திறந்த வான வீதியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு செல்லுபடியாகும்.

புதிய விதிகளின் கீழ் சில கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களும் தடை செய்யப்பட்ட பிரதேசங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இராணுவம் நிலைகொள்ளாத இருபகுதிகளும் கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

### ஜனாதிபதியின் வீடு உள்ள இடமும் அடங்கும்

அவற்றுள் ஒன்று ஜனாதிபதியினதும் அவரது குடும்பத்தினரும் வதியும் வீடுகள் உள்ள தங்கல்ல பகுதியின் வான் பிரதேசமாகும். விமானப்படையின் அனுமதியின்றி தங்கல்ல வான்பரப்பில் எந்த விமானமும் பறப்பதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டது.

மற்றையது கண்டியில் தலதாமாளிகை அமைந்துள்ள பிரதேசமாகும். இந்த கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசம் 6 கடல் மைல் தொலைவை சுற்றுவட்டமாகக் கொண்டிருக்கும் ஏனைய கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் நாட்டிலுள்ள விமானப்படைத் தளங்கள் அமைந்துள்ள பிரதேசங்களாகும். அனுராதபுரம், மின்னேரியா வவுனியா, யாழ்ப்பாணம், சிகிரியா மற்றும் திருகோணமலை முதலியன அவற்றில் அடங்கும்.(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டச் செயலக சிற்றுண்டிச்சாலை

**கேள்விப்பத்திர அறிவித்தல்**

யாழ்.மாவட்டச் செயலக சிற்றுண்டிச்சாலையை 14.01.2008 ஆம் திகதியிலிருந்து பொறுப்பெடுத்து நடத்துவதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்களை 19.12.2007 முதல் 26.12.2007 வரை அலுவலக நாள்களில் *செயலாளர், யாழ்.மாவட்ட நலன்புரிச் சங்கம்* அவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்வி விண்ணப்ப முடிவுதிகதி - 27.12.2007 பி.ப 2மணி.

(சி/54721) **செயலாளர்.**



வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




[illegible]

*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்*

**'சிவா நறுமணப் பூங்கா'**

*288, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.*

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி
**மகேஸ்வரி அம்புத்துரை**



தோற்றம்
26-05-1926

மறைவு
17.11.2007

*எமது அன்புத் தெய்வமே*
*ஆருயிர் அம்மாவே*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

கடந்த நவம்பர் 17 ஆம் திகதி காலமான எங்கள் குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எம்மோடு துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலமும் பிறவழிகளிலும் எம்முடன் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்து எமக்கு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (17.12.2007)திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.* **குடும்பத்தினர்.**


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

942 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு **10 11 25 42**

**14-12-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5372729 - 5387732

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 310,458 | 10/- | 3,104,580/- |
| 2 இலக்கங்கள் | 28,412 | 20/- | 568,240/- |
| 1 இல. + லக்கினம் | 28,157 | 30/- | 844,710/- |
| 2 இல. + லக்கினம் | 2,606 | 100/- | 260,600/- |
| 3 இலக்கங்கள் | 778 | 500/- | 389,000/- |
| 3 இல. + லக்கினம் | 67 | 5,000/- | 335,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 5,802,130/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 370,486 | | 6,825,630/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,693,200/-

தொடர் இலக்கம் 4499442 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 டிசெம்பர் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 5377223-2-74 |
| காலி | 5381623-9-84 |
| கம்பஹா | 5372751-9-74 |
| அம்பாறை | 5375933-7-66 |
| கம்பஹா | 5387085-3-75 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## தும்பளையில் முன்பள்ளிப் புதிய கட்டடம்


பருத்தித்துறை,டிசெ.17

பருத்தித்துறை, தும்பளை கிழக்கு உதய சூரியன் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கு 16 இலட்சம் ரூபா செலவில் போரூட் நிறுவனம் முன்பள்ளிக் கட்டடத்தை நிர்மாணித்து வழங்கியுள்ளது.

இம் முன்பள்ளிக்கான தளபாடங்கள் விளையாட்டு உபகரணங்களையும் அந்த நிறுவனம் வழங்கியுள்ள தாகவும் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசம் சுனாமியால் பெரும் பாதிப்பிற்குட்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. (1-218)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா இராசகுலசிங்கம்**

பிறப்பு
26.11.1972

இறப்பு
17.11.2007

திதி: அட்டமி (17.12.2007)

**மீசாலை ஊரினிலே**
**துரை என்னும் பெயரினிலே**
**வளமுடன் நீ வாழ்கையிலே**
**முப்பத்தைந்து வயதினிலே**
**நோய் வந்து மடிந்தது ஏனோ?**

*என்றும் உன் நினைவில் வாடும்*
**குடும்பத்தினர்.**

தட்டாங்குளம் றோட்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம். (68983)

## மரண அறிவித்தல்

**சாமுவேல் சிவநாயகம்**

*(பேரின்பம் - அச்சுவேலி)*
(ஓய்வுபெற்ற அதிபர் - கொழும்பு வெஸ்லி கல்லூரி)



யாழ்ப்பாணம், கண்டுக்குழி, இல: 38, பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கை நிரந்தர வதிவிடமாகவும், கொழும்பு, இல.17, குணானந்த மாவத்தையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சாமுவேல் சிவநாயகம் 14.12.2007 இல் கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற சாமுவேல் முத்தம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சிவக்கொழுந்து ஜீவமலர்(ஓய்வு பெற்ற அதிபர், கொ/ஒபயசேகரா தமிழ் ம.வித்தியாலயம்/ அச்சுவேலி மகாவித்தியாலயம்) அவர்களது அன்புக் கணவரும், கிருபாகரனின்(S.K.ராஜன், அச்சுவேலி-சுவிஸ்) பாசமிகு தந்தையும், திருமதி பவளராணி (வவி)யின் மாமனாரும், காலஞ்சென்ற பரிமளம் மற்றும் தேவதாஸ், யோகமலர், அலிஸ், காலஞ் சென்ற அழகரட்ணம் (மில் றோய்) ஆகியோரின்சகோதரனும், சின்னத்துரை நேசம்(அச்சுவேலி) ஆகியோரின் மைத்துனரும், விநோத், வாசன், ஜெனோவா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.


அவரின் பூதவுடல் நேற்று (16.12.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சகல பரிசுத்தவான்கள் ஆலயத்தில் (ANGLICAN CHURCH) ஆராதனை நடைபெற்ற தன்பின் கனத்தை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி.கிருபாகரன்- *(S.K.ராஜன்-மகன்)*
இல: 17, ஸ்ரீ குணானந்த மாவத்த
கொழும்பு.
தொ.பே.இல: 0112381247.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.* (69057)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில
15
★
01
★
1934



ஆண்டவன் அடியில்
30
★
12
★
2003

அமரர்
**கந்தசாமி குழந்தைவேலு** *(தம்பியண்ணா)*

(வாணி சவுண்ட் உரிமையாளர்)
*திதி : அட்டமி 17.12.2007*

**நானிலத்தில் நீங்கள் மறைந்து**
**நான்காண்டுகள் மறைந்ததுவோ**
**நாமிருக்கும் காலம் வரை உங்கள்**
**நினைவிருக்கும் எம்மோடு நிறைந்து.**

(68932)

*கல்லூரி வீதி,*
*பருத்தித்துறை.*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

*மண்ணில்*
*08*
*
*10*
*
*1959*



*விண்ணில்*
*17*
*
*11*
*
*2007*

அமரர் **வஸ்தியாம்பிள்ளை அன்ரன் இராஜரட்ணம்** *(ராசா)*

**நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான**
**கிரீடமும் உன் தேவனுடைய கரத்தில்**
**ராஜ முடியுமாயிருப்பாய் (செயா.62.3)**
**மண்ணகத்தில் மனிதம் போற்றிய**
**மகத்தான வாழ்விற்காய் விண்ணகத்தில்**
**புனிதம் பூண இறைவன் அழைத்தாரோ?**
**மண்ணில் மறைந்தாலும் எம் மனதில்**

*நிலைத்திருக்கும் இவரின் ஆன்ம சாந்திக்காக பொலிகண்டி குழந்தையேசு ஆலயத்தில் இன்று (17.12.2007) திங்கட்கிழமை திருப்பலி நிறைவேற்றல் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.*

*இவரின் பிரிவால் வாடும்*
ஐயா, மனைவி, பிள்ளைகள்,சகோதரர்கள்,
அண்ணிமார்,மாமா, மாமிமார், மைத்துனர்மார்,
பெறாப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

*பதுவளை,*
*பொலிகண்டி.* *(68399)*

## விண்ணக வாழ்வில் முதலாம் ஆண்டு

அமரர்
**செல்லத்துரை செல்வநாயகம்**



"சீவியத்தில் இவரை நேசித்தோம்
மரணத்திலும் இவரை மறவோம்"

**T.S.S. நினைவாக**

ஆண்டொன்று சென்றதுவோ? ஆலமரம் வேரோடு சாய்ந்ததோ?
இதயம் கனக்கிறது, இரத்தம் உறைகிறது
நிழல் தந்து எமை வளர்த்தாய், காத்து வந்தாய்
உங்கள் பேரிரைச்சலும், சிரிப்பொலியும் எங்கே மறைந்தது?
பாசம் என்றால் என்ன என்பது இப்போது தான்
புரிகின்றது அப்பா! குறை ஏதுமின்றி எமை வளர்த்தவரே
நிறைவோடு நீங்கள் சென்றீர்கள் முறையோடு
உமை நினைந்து வாழ்ந்து உருகுகின்றோம்.

*இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (17.12.2007) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் உபசாரணையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*"செல்வமஹால்"*
*உயரப்புலம், ஆனைக்கோட்டை.*

*நின் பிரிவால் துயருறும்,*
**மனைவி, மக்கள், மருமகள்,**
**பேரர், உற்றார், உறவினர்.**

(68941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைவது தொடர்பான ஐ.நா. மாநாட்டில் எதிர்பாராத உடன்பாடு

## அமெரிக்க முட்டுக்கட்டை கடைசி நேரத்தில் வாபஸ்

லண்டன்,டிசெ.17

சுற்றுப்புறச் சூழல் மாசடைவது தொடர்பாக இந்தோனேஷியாவின் பாலியில் நடைபெற்று வந்த ஐ.நா. மாநாட்டில் எதிர்பாராத விதமாக ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. கரியமிலவாயு வெளியேற்றப்படுவதை பெருமளவில் துண்டிக்கவேண்டும் என்ற கருத்தை கடைசிவரை எதிர்த்து வ்ந்த அமெரிக்கா இறுதியில் இந்த விடயத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வர இணங்கியது.

ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் கரியமில வாயு வெளியேற்றத்துக்கு சில இலக்குகளை நிர்ணயிப்பதற்கு இந்த மாநாட்டில் உடன்பாடு எட்டப்பட்டது.

கியோட்டோ உடன்பாட்டுக்கு பதிலாக உருவாகக் கூடிய ஓர் உடன்பாடு குறித்த பேரம் பேச்சுக்களிற்கு வழி காட்டும் எதிர்கால வரைவுத்திட்டம் குறித்த அனைவரும் உ டன்பட்டுள்ளனர்.

கரியமில வாயு வெளியேற்றத்தைக் கடினமாகத் துண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு கடந்த சில நாள்களாக நடந்த இந்த மாநாடு பலத்த வாக்குவாதங்களைச் சந்தித்தது.

கடைசியில் உடன்பாட்டை எட்டியிருப்பினும் கரியமிலவாயுவின் அளவை எத்தனை வீதத்தால் குறைப்பது என்ற இலக்கு இங்கு எட்டப்படவில்லை. அமெரிக்கா குறிப்பிட்ட இலக்குகளை வைப்பதைத் தொடர்ந்து எதிர்ந்து வந்தது. சிறிய நாடுகள் அந்த இலக்குகள் தேவையாக அளவுக்கு இல்லை என்று முறைப்பட்டுக் கொண்டிருந்தன.

உடன்பாட்டை முடக்க கடைசி நேரத்தில் அமெரிக்கா முயன்றபோது அதற்கெதிராக கண்டனக்குரல்கள் மாநாட்டில் எழுப்பப்பட்டன. மாநாட்டுப் பிரதிநிதிகள் ஒருவர் மாறி ஒருவர் எழுந்து வாஷிங்ரனைக் கண்டித்தார்கள். இறுதியில் அமெரிக்கா உடன்பாட்டுக் இணங்கியபோது மாநாட்டு மண்டபமே மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது.

### சர்வதேச உடன்பாடு ஏற்பட உதவும்

புவிச் சூழல் மாற்றப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிகுறித்து சர்வதேச உடன்பாடு ஒன்று ஏற்படுவதற்கான ஒரு முக்கியமான முதல் அடி இது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கூறியுள்ளார். (ப)

# பாகிஸ்தானில் அவசரநிலை வாபஸ் அரசியல் அமைப்பு மீண்டும் அமுல்



இஸ்லாமாபாத்,டிசெ.17

பாகிஸ்தானில் 6 வாரங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட அவசரநிலை திரும்ப வாபஸ் பெறப்பட்டது. அந்நாட்டு அதிபர் பர்வேஷ் முஷாரப் இதை அறிவித்துள்ளார்.

இதையடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானின் அரசியல் அமைப்புச் சட்டம் மீண்டும் நடைமுறைக்கு வந்தது.

நாட்டில் அவசர நிலை இருக்கும் போது , பாகிஸ்தானில் ஜனவரி 8 ஆம் திகதி தேர்தல் நியாயமாக நடக்காது என்று எதிர்க் கட்சிகள் பிரசாரம் செய்து வந்தன. உலக நாடுகளும் பாகிஸ்தான் அதிபரின் செயலை விமர்சித்து வந்தன. இதையடுத்து அவசர நிலையை திரும்பப் பெறுவதாக முஷாரப் அறிவித்துள்ளார். இதற்காக 3 ஆணைகளை அவர் வெளியிட்டுள்ளார். அவசர நிலையை திரும்பப் பெறுவது, அடிப்படை உரிமையையும், அரசியல் அமைப்பு சட்டத்தையும் நிறுத்தி வைக்கும் தற்காலிக அரசியல் அமைப்பு சட்டத்தை திரும்பப் பெறுவது, 1973 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை மீண்டும் கொண்டு வருவது என 3 ஆணைகளை முஷாரப் வெளியிட்டார்.

அவசர நிலை நடைமுறையில் இருந்த 6 வார காலத்தில் முஷாரப் மேற்கொண்ட நடவடிக்கைகளை யாரும் சட்டப்படி எதிர்த்து வழக்குப் போட முடியாதபடி, அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில திருத்தங்களை முஷாரப் செய்த மறுநாள், அவசர நிலையை அவர் திரும்பப் பெற்றுள்ளார். 64 வயதான அவர், பாகிஸ்தான் ராணுவத் தளபதி பதவியிலிருந்து கடந்த மாதம் விலகினார்.

பாகிஸ்தான் அதிபராக இருப்பதற்கு தகுதியிழக்கச் செய்யும் விதிகளை அவர் திருத்தினார். அவர் பிறப்பித்த அவசர நிலையை ஏற்காத உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நவம்பர் 3ஆம் திகதியில் இருந்து ஓய்வுபெற்றதாக அறிவித்தார். அதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஷரத்துக்களை திருத்தினார். (ப)




# கைதான மலேசியத் தமிழர்களை சட்டப்படி நடத்துமாறு அமெரிக்கா அறிவுறுத்து

மலேசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழர் தலைவர்களை மலேசிய அரசு சட்டப்படியும் அவர்களது உரிமைகள் கெடாதபடியும் நடத்த வேண்டும் என அமெரிக்கா கூறியுள்ளது.

மலோசியாவில் சம உரிமை கோரி போராட்டம் நடத்திவரும் தமிழர்கள் மீது மலேசிய அரசு எடுத்துவரும் அடக்குமுறை நடவடிக்கைகளை சமீபத்தில் அமெரிக்கா கண்டித்திருந்தது. மனித உரிமைகள் மீறப்படுவது கவலை தருவதாக அது கூறியிருந்தது.

இதுகுறித்து அமெரிக்கா மீண்டும் கவலை தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்கா வெளியுறவுத்துறை செய்தித் தெடர்பாளர் சீன் மெக்கார்மாக் கூறுகையில் கைதுசெய்யப்பட்டவர்களை மலேசிய அரச அந்நாட்டுச் சட்டப்படி நடத்த வேண்டும். அவர்களுக்குரிய உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்று அமெரிக்கா விரும்புகிறது.

விசாரணையை விரைவாகவும் வெளிப்படையாகவும் மலேசிய அரசு நடத்த வேண்டும். அமைதியான முறையில் தங்களது கருத்தை வெளிப்படுத்த விரும்பும் அரசியல் அமைப்புகள் மீதோ தனிப்பட்ட அமைப்புகள் மீதோ குடிமக்கள் மீதோ அடக்குமுறையைக் கையாளக்கூடாது என்ற கருத்தில் அமெரிக்கா உறுதியாகக் உள்ளது - என்றார் அவர். (ப)

**புலிகளுக்கு ஆயுத பேரம் நடத்தினாராம்**

# இந்தோனேசியருக்கு அமெரிக்காவில் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை

பால்டிமோர்,டிசெ. 17

தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக அமெரிக்காவில் ஆயுதங்கள் வாங்கி கடத்த முயன்ற குற்றச்சாட்டில் இந்தோனேசியாவைச் சேர்ந்த ஹாஜி சுபாண்டி ( வயது 70) என் பவருக்கு அமெரிக்கா நீதிமன்றம் 3 ஆண்டு கள் சிறைத்தண்டனை விதித்தது.

கடந்த 2006இல் மேரிலாண்ட் பகுதியைச் சேர்ந்த ஆயுதக் கடத்தல்காரர் ஒருவரி டமிருந்து ஏவுகணைகள் உள்ளிட்ட அதிநவீன ஆயுதங்களை வாங்க பேரம் நடத்திய போது சுபாண்டி கைது செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது.

ஒரு வருடமாக நடந்த இந்த வழக்கில் சுபாண்டிக்கு 37 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி கேத்ரின் சி பிளேக் தீர்ப்பு வழங்கினார். (ப)


UPGRADING THE JAFFNA TECHNICAL COLLEGE AS COLLEGE OF TECHNOLOGY
UNDER THE KOREAN TECHNICAL ASSISTANCE PROGRAMME

**யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரி கொரிய அரசின் உதவியுடன் தொழில்நுட்ப்வியல் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படுகின்றது**

koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica koica

கொரிய தேசத்தின் நவீன தொழில்நுட்பத்தை எமது தமிழ்ப் பிரதேச மாணவர்கள் இங்கிருந்தே பயிலும் வாய்ப்பை ஏற்படுத்துவற்காகவும் உலகின் முன்னணி தொழில்நுட்ப தரம் வாய்ந்த இயந்திரங்களை இயக்குவதற்கான பயிற்சியைப் பெறுவதற்கும் கொரிய நாட்டின் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் இணைந்து யாழ்ப்பாண மண்ணில் கொரிய இயந்திரங்களைப் பொருத்துவதற்கான பயிற்சியைப் பெறுவதற்காக யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும் மாகாண நிறைவேற்றுப் பணிப்பாளருமான **கலாநிதி ந.யோகராஜன்** அவர்கள் தலைமையிலான விரிவுரையாளர் குழுவினரின் கொரிய நாட்டுக்கான பயணம் யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி வளர்ச்சிப் பாதையின் ஓர் மைல் கல் ஆகும்.



**Dr.N.Yogarajan SLTES JP**
Principal/ Provincial Executive Director

*பொறியியல் எத்திரவியல் (Mechanical Engineering) துறைசார்ந்த நிபுணத்துவத்திற்கான கொரிய அரசின் பயிற்சிக்காக*



**திரு.வை.சத்தியநாதன்** SLTES
*பொறியியல் பீடத் தலைவர்*



**திரு.க.துகானந்தன்** SLTES
*போதனாசிரியர் பொறியியல்துறை*

*தன்னியக்க எத்திரவியல் (Auto mobile Engineering) துறைசார்ந்த இயந்திரங்களை இயக்குவதற்கும் பொருத்துவதற்குமான பயிற்சிக்காக*



**திரு.அ.ஸ்ரீரங்கநாதன்**
*விரிவுரையாளர் தன்னியக்க எந்திரவியல்*



**திரு.சி.பாலகுமாரன்** A/ SLTES
*போதனாசிரியர் தன்னியக்க எந்திரவியல்*

Promotion of Peace and the Country Development Through Technical Education
Honourable Minister Piyasena Gamage M.P.,
ministry of vocational and Technical Training



படித்த அனைத்து மாணவர்களுக்கும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் மூலம் தொழில்நுட்பப் பட்டம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்துவதும் தொழில்நுட்பக் கல்வியூடாக நாட்டில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதென்ற **மாண்புமிகு அமைச்சர் பியசேன கமகே** அவர்களின் செயற்றிட்டத்தில் இணைந்து பணியாற்றும் அதிபரும் மாகாண நிறைவேற்றுப் பணிப்பாளருமான **கலாநிதி ந.யோகராஜன்** அவர்கள்.

*மின் எந்திரவியல் Electrical Engineering துறைசார்ந்த பரீட்சிப்பு உபகரணங்களைப் பொருத்துதலும் இயக்குதலுமான பயிற்சிக்காக*



**திரு.வே.வெற்றிவேல்** SLTES
*போதனாசிரியர் மின்னியல் துறை*



**திருமதி.த.பானுமதி** SLTES
*போதனாசிரியர் மின்னியல் துறை*



**திரு.சி.ரவீந்திரன்**
*விரிவுரையாளர் மின்னியல் துறை*

*காரியாலய தன்னியக்க முறைசார் கணனிவலைப் பின்னல் Office Automation & Computing Network துறைசார் பயிற்சிக்காக*



**திரு.சு.முகுந்தன்** SLTES
*இணைப்பாளர்*
*கற்றல் வளங்கள் பயன்பாட்டு மையம்*



**திரு.ஆ.நற்குணேஸ்வரன்** SLTES
*விரிவுரையாளர் கணிதம், விஞ்ஞானம்.*



**திரு.பொ.ஜனார்த்தனன்**
*போதனாசிரியர் கணனியியல்*

**யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரி தொழில்நுட்பவியல் நிறுவனமாகவும் அதனைத் தொடர்ந்து தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகமாகவும் தரமுயர்த்தும் வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சர் பியசேன கமகே அவர்களின் திட்டத்திற்கு அமைவாகக் கொரிய நாட்டில் உயர் தொழில்நுட்ப நிபுணத்துவ பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரி சரித்திரத்தில் முதன் முறையாக அதிக தொகையான விரிவுரையாளர் கொண்ட குழுவினரும் அதிபரும் மாகாண நிறைவேற்றுப் பணிப்பாளருமான கலாநிதி ந.யோகராஜன் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளும் கொரிய நாட்டுக்கான பயணம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகின்றோம்.**



**திரு.சி.தயாநாதன்**
தலைவர்
சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம்



**திரு.கு.சாந்தகுமார்**
வர்த்தகத்துறைத் தலைவர்
சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம்



**திரு.ச.சங்கரநாதன்**
பதிவாளர்



**திரு.அ.சந்திரகுமாரன்**
தலைவர்
ஊழியர் சங்கம்




**திரு.ம.மதிவர்ணன்**
செயலாளர்
ஊழியர் சங்கம்

**யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரி/ தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 ★ 01 ★ 1924

உதிர்வு 27 ★ 12 ★ 2006

விஸ்வகுலத்திலகர், ஓய்வுபெற்ற போதனாசிரியர்,

அமரர் கலாபூஷணம் **வல்லிபுரம் கந்தையா** (மணியம்மாஸ்ரர்)

திதி: 17.12.2007

எங்கள் அன்பின் சிகரமே!
எங்கள் குடும்ப விளக்கே!
மாசில்லாக் கொழுந்தே!
கற்பக விருட்சமே!
எங்கள் பாசத்தின் மாமணியே!
எங்களது வாழ்வுக்கு
வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
ஒருவருடம் சென்றாலும்
உங்கள் நினைவு எம்மைவிட்டகலாது.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்*

40/1, கலைமகள் வீதி,
அரியாலை. (68960) குடும்பத்தினர்.

---

ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com

**Learn French the French Way**

**பிரெஞ்சு மொழி வகுப்புகள்**
**புதிய பிரிவு**

நீங்கள் பிரெஞ்சு மொழியைக் கற்க ஆவலாக உள்ளீர்களா? மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில் புரிவோர், ஆர்வமுள்ளோர் அனைவருக்குமான புதிய வகுப்புகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டம் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் உதவியுடன் நடைபெறுகின்றது.

பதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளலாம். கட்டணம் மற்றும் ஏனைய விவரங்களை நேரில் அல்லது தொலைபேசியின் ஊடாகக் கேட்டறியலாம்.

(கற்பதற்கு ஆங்கில அறிவு அவசியமில்லை) (68939)

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## நெஞ்சை நெருடும் முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு 24 * 05 * 1929

உதிர்வு 27 * 12 * 2006

**அமரர் இலட்சுமிப்பிள்ளை துரைச்சாமி**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/உடுவில் அ.மி.த.க.பாடசாலை)

திதி: பூர்வபக்க அட்டமி 17.12.2007

எம்மைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்மைவிட்டு அகலாது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

"ஜெயகிரி",
உடுவில் வடக்கு, சுன்னாகம். (68990) குடும்பத்தினர்

---

## பனங்கிழங்கு விற்பனை

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் பனங் கிழங்கு கடந்த சில தினங்களாக விற்ப னைக்கு வந்துள்ளன.

மாரிகாலம்பனங் கிழங்கு சீசனுக்கு உரிய காலமல்ல எனினும் இவை குறைந்த அளவில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

---

## ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்

IPDT

**Institution of Professional Development for Teachers**

**கற்பித்தல் சாதன ஆக்கத்தின்**
**டிப்ளோமா பாடநெறி - 2008 (அணி-2)**

**Diploma Course in Creation of Teaching Aids - 2008 (Batch-2)**

ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், சுய தொழிலில் ஆர்வமுள்ள வேலையற்றோர்களே! உங்களது வாண்மையை விருத்தியாக்கவும், கற்றல்-கற்பித்தல்-அழகு சாதனங்களை ஆக்கி சுயதொழில் மூலமான விருத்திக்குமாக உங்களை இப் பாடநெறி வழிகாட்டுகிறது.

★ பிள்ளைகளின் கல்வி உளவியல் -சமூகவியல் கலைத்திட்ட தேர்ச்சிகளை வழிப்படுத்தல்.

★ வீசி எறியும் பொருள்கள், செலவற்ற இயற்கைப் பொருள்கள், சிப்பி, சோகி, பனம் விதை, மட்டைகள், ஓலை, சிரட்டை, உறிஞ்சி மற்றும் பல்வேறு பொருள்களினூடு 5 E-7E மாதிரி கற்றல்-கற்பித்தலுக்கான உபகரணங்களைத் தயாரித்தல்.

★ அலங்கார உபகரணங்கள், பூக்கள், சுவர் அலங்காரம், தையல் வேலை, வெளிச்சவீடு, பட்டம், களிமண் கிளே வேலைகள், கோலம் போடுதல், பாய் பெட்டி இழைத்தல், நாகசடம், பொக்கே செய்தல், துணி அலங்கார வேலைகள், முகமூடி, பொம்மைகள் செய்தல்.

★ சிறுவர் சங்கீதம், நடனம், நாடகம், சித்திரம், விளையாட்டுக்கள் இசையும் அசைவும், அரங்க விளையாட்டுக்கள், நுண்மதி விளையாட்டுக்கள்.

எனப் பரந்துபட்ட விடயங்களில் தேர்ச்சிகளை இப்பாட நெறியூடாக பெற்றுக் கொள்ளலாம். இப்பாட நெறியில் பயில விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பி எதிர்வரும் 19.01.2008 ஆம் திகதிக்கு முன்னர் **பணிப்பாளர், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம் இல: 226 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

**உதவிப்பணிப்பாளர்**
**த. சிவகுமார்**
B.A., Dip.in Teaching,
Dip.in Psy (1st class). (68884)


**பணிப்பாளர் பா. தனபாலன்**
*B.A(Cey.), PGDE(merit), Dip.in Psy(1st class),*
*Dip.in Guidance and Counselling,*
*M. Phil in Education,*
*Cert.in Vocational Guidance(Singapore).*

---

## நினைவஞ்சலி

**நான்காம் ஆண்டு** **41 ஆம் நாள்**





**அமரர் சாந்தினி ஆனந்தராசா B.A.**
(ஆசிரியர்)
தோற்றம்: 20.01.1964
மறைவு: 13.12.2003

**அமரர் தம்பிஐயா கந்தசாமி**
(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)
தோற்றம்: 29.12.1935
மறைவு: 07.11.2007

கதைகள் பல கூறி
காதைவிட்டகலமுன்
காலன் கொண்டு சென்றானோ!
ஆறுதலின்றித் தவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மாரீசன்கூடல்,
இளவாலை. (சி/54707) குடும்பத்தினர்.

---

## நான்காம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த
17.12.2003 இல்
அமரத்துவமடைந்த

**அமரர்**
**பொன்னுத்துரை**
**ஐயாத்துரை**
**[துரைசிங்கம்]**
(சீமெந்துக் கூட்டுத்தாபன சிறாப்பர்)

**பாலை வனத்தில் பூக்கள் மலர்ந்திடலாம்**
**எம்முகத்தில் இனி மலர்ச்சியுண்டோ?**
**சூரியன் திசைமாறி மறையலாம்...**
**தங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு மறையுமா?**
**என்றும் தங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்!**

அன்னாரின் நான்காம் ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு அவரின் ஞாபகார்த்தமாக யாழ்.நாயன்மார்க்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய முன்றிலில் அமைக்கப்பெற்றுள்ளதும் மூன்றாம் ஆண்டு பூர்த்தி அடைந்துள்ளதுமான 'அட்சயசுரபி' அன்னதான மண்டபத்தில் இன்று (17.12.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், அன்னதானமும் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமதி யோகம்மா துரைசிங்கம்** (மனைவி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*315, ஆனந்தன்வடலி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (68939)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



செல்வன்
**தர்மகுலசிங்கம்**
**நிமல்ராஜ்**

மலர்வு 08-07-1991
உதிர்வு 17-11-2007

எம் இனிய பாசமான நிமலனே!
பாதியிலே எங்களைத் தவிக்கவிட்டு சென்றாயோ
மனமின்று உன் நினைவில் சுமையானதே
நாள்கள் நகர்ந்தாலும் நம் பாசங்கள் மாறிடுமோ
பிணியொன்று வந்து மரித்ததடா உன்னுயிரை
பொத்திப் பொத்தி வைத்திருந்த உன் முகம்
எமையறியாது தொலைந்துபோனதே
வாழ்வு ஒவ்வொருவருக்கும் பாடல் எழுதிப் போகிறது
உனக்குப் பாடல் எழுதப்பட்டுள்ளது
எமக்கும் ஒரு காலம் எழுதப்படும்
இதுதான் வாழ்வு
இது தான் நியதி
எங்கள் உயிரான நிமலனே, கண்ணீரால் உனக்கு ஆத்ம சாந்தி செலுத்தி ஆண்டவன் பாதங்களில் அமைதியாக சங்கமிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கடந்த 17.11.2007 சனிக்கிழமை அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் பங்கு கொண்டோர், துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (17.12.2007) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு, சுன்னாகம். (60052)

குடும்பத்தினர்.
தர்மகுலசிங்கம் (பாபு).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யுத்த வெறிப் போக்கு புத்தாண்டில் தீவிரமாகும்

நெருக்கடி மிக்க நாடாளுமன்ற வாக்கெடுப்பில் பலரும் எதிர்பாராத வகையில் வலிமையான வெற்றியை வெளிப்படுத்தியிருக்கின்றது மஹிந்த அரசு.

இந்த அரசுக்குள் புரையோடிப் போய்க்கிடக்கும் ஊழல், மோசடி, சீர்குலைந்த நிர்வாகம், மோசமான பொருளாதாரக்கொள்கை, அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற இன்னோரன்ன காரணங்களினால் நாட்டின் பொருண்மிய நிலைமை நாசமடைந்து விட்டதாகக் குற்றம் சுமத்திய ஜே.வி.பி., அந்தக் காரணங்களுக்காக 2008 ஆம் ஆண்டுக்கான வரவு -.செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அரசுக்கு எதிராக வாக்களித்து மஹிந்த நிர்வாகத்துக்கு அதிர்ச்சி அளித்திருந்தது.

ஆனால் அதே ஜே.வி.பி.,மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின் இறுதி நேரம் வரை அரசை எதிர்க்கப் போவதாக மிரட்டி விட்டு, கடைசியில் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விட்டு, அரசின் வயிற்றில் பாலை வார்த்தது.

தமிழர் தேசம் மீது அறிவிக்கப்படாத - பிரகடனப்படுத்தப்படாத - நான்காவது ஈழ யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, போரியல் தீவிரத்தில் முனைப்புக் கொண்டு யுத்த வெறிபிடித்து நிற்கும் இந்த அரசின் காலை வாரி விடுவது, தமிழர் தேசத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் யுத்தத்தின் காலை வாரிவிடுவதற்கு ஒப்பானது. என்று கருதியே இந்த அரசுக்கு ஆபத்பாந்தவனாக மாறி அதைக் கைகொடுத்துக் காப்பாற்றியிருக்கின்றது ஜே.வி.பி.

ஆக, வரவு - செலவுத் திட்டக் கண்டத்தில் தப்பிப் பிழைத்த இந்த அரசுக்கு, அதன் போரியல் தீவிரப் போக்கே அதற்குக் கை கொடுத்து உதவியிருக்கின்றது.

அது மாத்திரமல்ல. இத்தகைய போரியல் தீவிரப் போக்கைத் தாம் மேலும் கடும் தீவிரமாகப் பின்பற்றும் வரை தமது அரசை ஜே.வி.பி. கவிழ்க்கவே இடமளிக்க மாட்டாது என்ற உண்மையும் - யதார்த்தமும் - இந்தப் பட்டறிவு மூலம் அரசுத் தலைமைக்கு ஏற்பட்டிருக்கும் என்பதும் தெளிவு.

ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் யுத்த வெறிப் போக்கு என்பது இனி மீளத் திரும்பமுடியாத ஒரு வழிப்பாதையாகத்தான் அதற்கு அமைந்துவிட்டது என்பது உறுதி.

வன்முறைப் பாதையில் பயணித்து, அடக்குமுறையாலும், ஆயுத பலத்தாலும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு இராணுவ வழித்தீர்வு காண இந்த அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது என்பது வெள்ளிடைமலை.

அழிவாயுதங்களையும், போராயுதங்களையும் தருவித்து, தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் அரசின் திட்டத்துக்கு இந்த நாடாளுமன்ற வாக்கெடுப்பும், அதையொட்டி பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்குடைய பேரினவாத சக்திகள் நடந்துகொண்ட முறைமையும் நல்ல தூபமிட்டு அதை ஊக்குவித்திருக்கும் என்பதும் நிச்சயம்.

நாடாளுமன்ற வாக்கெடுப்பில் அரசு கவிழும் என்ற ஆபத்து நிலை ஏற்பட்டதும், ஜே.வி.பியின் காலில் இறுதிக் கட்டத்தில் வீழ்ந்த அரசு, புலிகளுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஒரு குறுகிய காலத்துக்குள் ரத்துச் செய்து, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை நாட்டைவிட்டு வெளியேற்றி, புலிகளுக்கு எதிராக முழு அளவிலான யுத்தத்தை முடுக்கி விடும் என்ற உறுதி மொழிகளை ஜே.வி.பிக்கு வழங்கி, அக்கட்சியைத் தாஜா செய்தே, அதை வழிக்கு வரப்பண்ணியது என்றும் -

அந்த வாக்குறுதி மூலமே நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தில் அரசுக்கு எதிராக வாக்களிக்காமல் வெளியேறும் முடிவுக்கு ஜே.வி.பியை இணங்கச் செய்தது என்றும் -

இப்போது செய்திகள் மெல்லக் கசியத் தொடங்கியிருக்கின்றன.

தான் கொடுத்த இந்த வாக்குறுதிகளைப் புதுவருடத்தில் நிறைவேற்றவும் அரசுத் தலைமை ஜே.வி.பிக்கு ஒப்புக்கொண்டிருப்பதாகவும் தெரிகின்றது.

அது உண்மையானால், பிறக்கும் புதுவருடம் - 2008 ஆம்ஆண்டு - இந்தப் போர் முனைப்பு அரசின் தூண்டலினால் இலங்கையைப் பொறுத்தவரை பெரும் யுத்த ஆண்டாக மலரப் போகின்றது என்பது உறுதி.

ஆகவே, அமைதி முயற்சிகளுக்கு நிரந்தரமாக ஆப்பு வைத்துவிட்டு, தனது இராணுவ நிகழ்ச்சித் திட்டத்தைத் துணிவுடனும் திமிருடனும் புத்தாண்டில் முன்னெடுக்கப் போகிறது மஹிந்தரின் அரசு.

இந்தப் போரியல் போக்குக்கு பொருளாதார, இராணுவ உதவிகளை வழங்கி, அரசியல் தார்மீக ஆதரவும் இராஜதந்திர முண்டு கொடுப்புகளையும் அளித்து, பக்கச்சார்பான தலையீடுகளை மேற்கொண்டு, ஒத்தாசை புரியும் சர்வதேச சமூகமும், அக்காரணங்களினால் இந்தப் போரியல் தீவிரச் செயற்பாடு முற்றுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற மாயையைக் காட்டி தென்னிலங்கை மேற்கொள்ளும் இந்தப் போர் வெறிச் செயற்பாட்டைக் கண்டிக்கவும், தடுத்து நிறுத்தவும், இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயவழித் தீர்வு எட்டக் காத்திரமான வழியில் செல்வதற்கு வலியுறுத்தவும் சர்வதேச சமூகம் காலம் தாழ்த்தாது முன்வர வேண்டும். அப்படிச் செய்தாலாவது யுத்த விளிம்பில் சிக்கித் தவித்து நிற்கும் இலங்கைத் தீவை அந்தப் பேரழிவுச் சகதிக்குள் வீழ்ந்து விடாமல் காப்பாற்ற வாய்ப்புக் கிட்டும் என்று மக்கள் நப்பாசை கொள்ளலாம்.

# இந்தியாவிடமும் ரஷ்யாவிடமும் இருந்து ஆயுதக்கொள்வனவுக்கு இலங்கை முயற்சி

## அந்நாட்டுப் பிரதிநிதிகளுடன் இவ்வாரம் பேச்சு

கொழும்பு, டிசெ.17

வான் பாதுகாப்பு ஆயுதங்கள் உட்படப் பெருமளவு இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவுசெய்வது தொடர்பாக இலங்கை இவ்வாரம் இந்திய மற்றும் ரஷ்யப் பிரதிநிதிகள் குழுக்களுடன் பேச்சு மேற்கொள்ளவுள்ளது.

விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் - செக் நாட்டில் தயாரிக்கப்பட்ட - விமானங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் தரத்தை அதிகரிப்பது தொடர்பாக இந்திய ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள் இவ்வாரம் கொழும்புடன் பேச்சுகளை மேற்கொள் ளவுள்ளனர்.

இலங்கைக்கு ஏற்கனவே 'ராடர்' சாதனங்களை வழங்கியுள்ள இந்தியா, இங்கு இலங்கைப் படையினரின் வான் பாதுகாப்புத் திறனை அதிகரிப்பது குறித்த பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளது.

இராணுவம் தன்னிடமுள்ள எம்.ஐ-35 ரகத் தாக்குதல் ஹெலிக்கொப்டர்களின் தரத்தை உயர்த்துவதற்கு முயல்கிறது.

ரஷ்யக் குழுவினருடன் இன்று நடைபெறும் பேச்சுகளில் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது பற்றி கவனம் செலுத்தப்படும் எனக் கூறப்படுகின்றது.

இலங்கை பாதுகாப்பு அமைச்சோ அல்லது கொழும்பிலுள்ள ரஷ்ய இந்திய தூதரகங்களோ இது குறித்துக்கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை.

விடுதலைப் புலிகள் இவ்வருடம் தமது விமானத் தாக்குதல்களை ஆரம்பித்தமையைத் தொடர்ந்து இலங்கை தனது வான் பாது காப்புத் திறனை அதிகரிப்பதற்கான முயற் சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. (உ)

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# 'றோ' கொழும்பில் தம்மைக் கொல்ல முயன்றதாக பாக். தூதுவர் சொல்கிறார்

கொழும்பு, டிசெ.17

இலங்கைக்கான பாகிஸ்தானின் முன்னாள் தூதுவர் பஷீர் வலி முகமட் கடந்த வருடம் கொழும்பில் தம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் முயற்சிக்கு இந்தியாவின் வெளிநாட்டு புலனாய்வு அமைப்பான 'றோ' காரணம் எனப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசார நிகழ்வில் கலந்து கொண்ட வேளையே பஷீர் வலி முகமட் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் தமது வாகன அணி மீது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதும் அது பற்றிய விடயம் உலகின் வேறு எந்தப் பகுதியையும் விட புதுடில்லிக்கே முதலில் தெரியவந்தது எனவும் இது தனக்கு ஆச்சரியமளித்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்பிற்குப் பின்னர் தான் தனது இல்லத்திற்குச் சென்றதும் புதுடில்லியைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் மற்றும் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்த முக்கிய இராஜதந்திர பிரதிநிதிகள் ஆகியோரிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் காத்திருந்தன எனவும் அவர்கள் தனது உடல் நலம்குறித்து விசாரித்தனர் எனவும் பஷீர் வலி முகமட் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் குறித்து முற்கூட்டியே அவர்களுக்குத் தெரிந்திருக்காவிட்டால் அவர்கள் அவ்வளவு வேகமாக கேள்விப்படுவதற்கு சந்தர்ப்பமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் நான் பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவின் தலைவராகப்பணியாற்றினேன். இதனாலேயே நான் இலங்கையில் எனது பணியை ஆரம்பிப்பதற்கு முன்னரே என்னைக் கண்டித்தனர்.

'றோ' விற்காகப் பணியாற்றுபவர் என நன்கு அறியப்பட்ட பத்திரிகையாளர் ஒருவரே என்னை கண்டித்து கட்டுரை எழுதினார். - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது மெய்ப் பாதுகாவலர் ஒருவர் தனது தாயிடம் அடுத்த முறை தான் பிரேதப் பெட்டியிலேயே வருவார் எனத் தெரிவித்திருந்தார் என்றும், அவ்வாறே அவர் கொல்லப்பட்டார் எனவும் பஷீர் வலி முகமட் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

# புலிகள் மீதான தடையை நீடிக்க மத்திய உளவுப் பிரிவினர் சதி

## திருமாவளவன் குற்றச்சாட்டு

சென்னை, டிசெ.17

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க இந்திய மத்திய உளவுத்துறை அதிகாரிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன்.

மத்திய அமைச்சர் இளங்கோவன் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் -

"விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவர்கள்திருமாவளவனோ, பெருமாவளவனோ அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். இதற்குத் தமிழக அரசு தயக்கம் காட்டக்கூடாது" - என வலியுறுத்திக் கூறியிருந்தார்.

அமைச்சரின் இந்தக் கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் வழங்கிய செவ்வியிலேயே திருமாவளவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். செவ்வியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை கடந்த ஏப்ரல் மாதத்துடன் முடிவுக்கு வந்துவிட்டது. அதை மறுபடியும் நீடிக்கத்தான் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருக்கின்றது என மத்திய உளவுப்பிரிவு அதிகாரிகள் (ஐ.பி.) சிலர் சதிவேலைகளைச் செய்கிறார்கள். தமிழக 'கியூ' பிரிவுக்கும் பல தகவல்களைத் திரித்துச் சொல்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு தார்மீக ஆதரவுக் குரல் எழுப்பும் விடுதலைச் சிறுத்தைகளை இதனால் குறிவைக்கிறார்கள். நாங்கள் மறைமுகமாகவோ, நேரடியாகவோ விடுதலைப் புலிகளுடன் எந்தவிதத் தொடர்பும் வைத்திருக்கவில்லை. தார்மீக ஆதரவு குரல் கொடுப்பது குற்றமா? விடுதலைப் புலிகளுக்கு பொருள் உதவியோ, அல்லது அவர்களுக்குத் தேவையான உதவிகளையோ நாங்கள் செய்வது கிடையாது.

'ஈழம்' விடுதலை அடையவேண்டும். அங்குள்ள தமிழர்களும் நிம்மதியாக வாழவேண்டும் என்று தார்மீக ஆதரவு குரல் கொடுப்பது தவறு அல்ல.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகளில் கூட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அங்கு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசக்கூடாது என்று எந்தக் கெடுபிடியும் இல்லை. அங்கு பேரணி நடத்துகிறார்கள். அவர்கள் நாட்டுத் தேசியக் கொடியுடன் விடுதலைப் புலிகளின் கொடிகளையும் ஏற்றுகிறார்கள். பிரபாகரனின் படங்களைத் திறந்து வைக்கிறார்கள்.

அஞ்சலி செலுத்தக்கூடாது, இரங்கல் தெரிவிக்கக்கூடாது என்று காங்கிரஸார் சொல்வது கொடுமையிலும் கொடுமை. இது வெட்கக்கேடானது. தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் கொடியை யாரும் ஏற்றுவது கிடையாது. பிரபாகரனின் படத்தை ஊர்வலத்தில் கொண்டு செல்வதில்லை. இலங்கையில் தமிழர்கள் படும் இன்னல்களைப் பார்த்து வாயளவில் தார்மீக ஆதரவுக் குரல் கொடுப்பது கூடத் தவறு என்றால் அதை எப்படி ஏற்பது?" - என்றார் திருமாவளவன்.

# அமெரிக்காவில் இந்திய மாணவர் இருவர் விடுதியில் சுட்டுக் கொலை

வாஷிங்ரன், டிசெ.17

அமெரிக்காவில் லூசியானா பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்களாக தங்கிப் படித்துவந்த ஆந்திராவைச் சேர்ந்த இரு மாணவர்கள் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலம் கர்நூல் மாவட்டத்தைச் சேர்ந்த சந்திரசேகர் ரெட்டி, கரீம் நகர்மாவட்டத்தைச் சேர்ந்த கிரண் குமார் இருவருமே கொல்லப்பட்டவர்கள்.

இவர்கள் இருவரும் லூசியானா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்களாக தங்கிப் படித்து வருகின்றனர். இருவரும் திருமணமானவர்கள்.

எனவே இவர்களுக்கு திருமணமான மாணவர்களுக்கான இருப்பிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. சிலதினங்களுக்கு முன் சந்திரசேகரர் ரெட்டி தங்கியிருந்த அறைக்குள் கிரண்குமார் சென்றார். நீண்டநேரமாகியும் அவர் திரும்பிவரவில்லை. இதனால் பயந்து போன அவரது கர்ப்பிணி மனைவி சந்திரசேகர் ரெட்டியின் அறைக்குச் சென்றார்.

அங்கு கிரண்குமாரும், சந்திரசேகர் ரெட்டியும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டு பிணமாகக் கிடந்ததைக் கண்டு அதிர்ந்தார். இருவரும் கட்டப்பட்டு, நெற்றிப்பொட்டில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இவர்களை யார் கொன்றனர், எதற்காக இந்தக் கொலை நடந்தது என்று தெரியவில்லை. ஆனால் திட்டமிட்டபடுகொலை என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் நடந்த பகுதியிலிருந்து அடையாளம் தெரியாத மூன்றுபேர் சென்றதாக சிலர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர். இந்த இரட்டைக் கொலை தொடர்பாக பொலீஸார் தீவிர விசாரணைநடத்தி வருகின்றனர். (சி)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 02 | செவ்வாய்க்கிழமை |
| | 182.12.2007 |
| திதி : நவமி | மு.இ 09.06 |
| நட்சத்திரம் : | உத்தரட்டாதி |
| | பி.இ 03.10 |
| சுபநேரம் | : 10.53 - 12.23 |
| ராகுகாலம் | [illegible] |

# வலி-தெற்குப் பிரதேச செயலகத்தில் இன்று பாராட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்.மாவட்டபிரதேச செயலகங்களுக்கிடையில்நடத்தப்பட்ட முகாமைத்துவப்போட்டியில் 2ஆம் இடம் பெற்ற வலி.தெற்கு பிரதேச செயலகத்தின் செயலாளரையும் அனைத்து அலுவலர்களையும் பாராட்டும் விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் இடம் பெறவுள்ளது.

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம்,யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ வணிகத்துறைப்பீடாதிபதி க.தேவராஜா, வலி தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி.சரஸ்வதி சொக்கலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர்.

உடுவில் பிரதேச செயலர் செல்வி. மஞ்சுளாதேவி தனபாலன் சமர்ப்பண உரை நிகழ்த்துவார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பணியாற்றுவதைத் தவிர்க்க ஐ.நா. பணியாளர்கள் சங்கம் ஆலோசனை

கொழும்பு,டிச.17

இலங்கையில் மனிதாபிமானப் பணிகளை ஆற்றுவதற்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் பணியாளர்கள் சங்கம் உலகெங்கிலுமுள்ள தனது 13 ஆயிரம் உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மனிதாபிமானப் பணியாளர்களுக்கு இலங்கை மிகவும் ஆபத்தான இடம் என்பதாலேயே இந்த ஆலோசனை வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஐ.நா. ஊழியர்கள் மீதான சமீபத்திய தாக்குதல்களும் குற்றச்சாட்டுகளும் ஐக்கிய நாடுகள் சபையின் ஊழியர்கள் தமது பணியை நிறைவேற்றும் திறனைப் பாதித்துள்ளன என சர்வதேச பொதுச் சேவையின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கான ஊழியர் சங்கக் குழு எச்சரித்துள்ளது.

சர்வதேச பொதுச் சேவையின் சுதந்திரத்தை மீறும் வகையில் இலங்கையில் சமீபத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆழ்ந்த கவலையை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது. வேண்டுமென்றே இலக்கு வைக்கும் நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபை தனது பணியை நிறைவேற்றுவதைப் பாதிக்கின்றன. மேலும் ஐக்கிய நாடுகள் சங்கத்துக்கு அதன் பணியாளர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கைக்கும் அது பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் தமது பணியாளர்களுக்குப் போதிய ஆதரவு வழங்காதமை குறித்தும் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராகவும் அதன் அமைப்புகளுக்கு எதிராகவும் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களின் படுகொலைக்கு எதிராக அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 'யுனிசெவ்' பணியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என பணியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், ஐ.நா. பணியாளர்கள் சங்கத்தின் இந்த அறிக்கையினால் பாதிப்பு ஏதும் ஏற்படாது என நம்பிக்கை வெளியிட்டிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன, ஐக்கிய நாடுகளின் பல பணியாளர்கள் இலங்கையில் பணிபுரிய ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். (சி)

## பைஸல் காசிமின் பணிமனை எரிப்பு!

கொழும்பு, டிச.17

கடந்தவாரம் அரச தரப்பிலிருந்து எதிர்த்தரப்பிற்கு மாறிய இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி. பைஸல் காசிமின் சம்மாந்துறைக் காரியாலயம் இனம் தெரியாத குழு ஒன்றினால் நேற்றுக்காலை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை பைஸல் காசிம் மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்ற சமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(சி)

## நாடாளுமன்றை இடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது பொது நிறுவனங்கள் தொடர்பான விசாரணைக் குழு 'கோப்' - என்ற நாடாளுமன்றக் குழுவின் தலைவராக அரசுத் தரப்பிலிருந்து எதிரணிக்கு மாறிய விஜேதாஸ ராஜபக்ஷ எம்.பி. உள்ளார்.

கடந்த ரணிலின் அரசிலும் தற்போதைய அரசிலும் முக்கிய அமைச்சர்களாக இருந்தவர்கள் மற்றும் இருப்பவர்கள் புரிந்தவை எனக் கூறப்படும் பல்வேறு ஊழல்கள், மோசடிகள் பற்றிய விவரம் இந்த நாடாளுமன்ற உபகுழுவின் விசாரணைகளையடுத்து அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றமையும் -

அது அரசுத் தலைமைக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்து வருகின்றமையும் - தெரிந்தவையே.

### 'கோப்' செயல் இழந்துவிடும்

நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி, சற்றுக் காலத்தின் பின்னர் அதைக் கூட்டும்போது விஜேதாஸ ராஜபக்ஷ தலைமையிலான 'கோப்' நாடாளுமன்றக்குழுவும் செயலிழந்து விடும். பின்னர் புதிய 'கோப்' குழுவை, புதிய தலைவர் ஒருவரின் கீழ் நியமித்து, ஊழல் - மோசடி விவகாரங்கள் தொடர்பான நெருக்கடிகள் தீவிரமடைவதைத் தடுக்க முடியும் என அரசுத் தலைமை கருதுகின்றது எனத் தெரிகின்றது.

நாடாளுமன்றத்தை இடைநிறுத்தும் நோக்கத்துக்கு இதுவே பிரதான காரணம் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை -

வரவு - செலவுத்திட்டக் கண்டத்தை அரசு வெற்றிகரமாகத் தாண்டி விட்டதால், தாம் நீண்ட காலம் யோசித்துவந்த அமைச்சரவை மாற்றத்தை இப்போது உடன் செயற்படுத்த ஜனாதிபதி திட்டமிட்டிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அனுரா பண்டாரநாயக்கா ஆகியோர் இதுவரை வகித்து வந்த அமைச்சுப் பதவிகள் வெற்றிடமாகியிருக்கின்றன.

மேலும் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு, இப்போது வரவு - செலவுத் திட்டத்தில் அரசைக் காப்பாற்றிய ஜே.வி.பி. அரசை வற்புறுத்தி வருகின்றது.

இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்து, பெரும் அமைச்சரவை மாற்றம் ஒன்றை மேற்கொள்ள ஜனாதிபதி திட்டமிட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

வெளிவிவகாரம், முதலீட்டு ஊக்குவிப்பு, தொலைத் தொடர்புகள், மின்வலு, விளையாட்டுத்துறை, நீதி ஆகிய அமைச்சுக்களின் பொறுப்பில் பெரும் மாற்றங்கள் நேர வாய்ப்புகள் அதிகம் தென்படுகின்றன என அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது. (அ-உ)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணக்காய்வாளர்

திரு ,ஆ.கனகசபையின் அன்புத்தந்தை

**சிதம்பரப்பிள்ளை ஆனந்தநடராஜா**

அவர்கள் இறைபதம் எய்தியதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்தோடு அமரருக்குக் கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

உதயன் வெளியீட்டகம்

நிர்வாகத்தினரும்,
பணியாளர்களும்.

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் உட்படப் பல ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகள் வன்னி செல்வதற்கு அவ்வப்போது விடுத்த வேண்டுகோளை அரசு கடந்த காலங்களில் நிராகரித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வோல்டர் கலின் தனது தற்போதைய இலங்கை விஜயத்தின் அவதானிப்புகள் பற்றிய அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் சமர்ப்பிப்பார் என கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-1)

## யாழ். மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் இவர் பணியாற்றி வருகின்றார்.

இவர் முதலாம் தர மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு பெற்றதை அடுத்து யாழ். நீதிமன்ற நீதிவானாக திருமதி ஜோய் மகாதேவன் கடந்த 14ஆம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டார்.

இதேவேளை, வவுனியா மாவட்ட நீதிபதி மா.இளஞ்செழியனும் முதல்தர மாவட்ட நீதிபதியாக நீதிச்சேவை ஆணைக்குழுவால் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

தமிழ் மாவட்டங்களில் பணிபுரியும் நீதிபதிகளில் இ.த.விக்னராஜா மற்றும் மா.இளஞ்செழியன் ஆகிய இருவருமே முதல்தர நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்குள் முடக்கிவிட இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்களுக்குத் தேவையான நலன்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார் அவர்.

### ஓகஸ்டுக்கு முன்னர் முற்றாக ஒழிப்போம்

இதேவேளை -

அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர், விடுதலைப் புலிகள் எவரும் நாட்டில் இல்லாதவாறு முற்றாக ஒழித்துவிடப் போவதாகவும் இராணுவத்தளபதி சூளுரைத்திருக்கிறார்.

இராணுவத் தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் தளபதி இவ்வாறு கூறினார் எனவும் -

அதற்கு எல்லோரும் ஒத்துழைப்புத்தர வேண்டும் என்று அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் எனவும் - மற்றொரு தகவல் தெரிவித்தது. (அ-1)

**ICT Grade 10 And G.C.E. O/L**

Grade 10 - Fundamentals of ICT(Hardware)
G.C.E. O/L - Programming(VB6/SDLC)
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
R.Kumaran - B.Sc. T.P 0776577359 New Batches

## இராணுவ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச்செய்தல், போரைத் தீவிரப்படுத்தல், எதிரிகளைத் தோற்கடிப்பது, அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது நாட்டில் இறைமையைப் பாதுகாப்பது ஆகிய தமது பழைய கோரிக்கைகளையும் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில ஜே.வி.பி. தலைவர்கள் வலியுறுத்தினர். (அ)

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை ஆனந்தநடராஜா



தும்பளையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை ஆனந்தநடராஜா வெள்ளிக்கிழமை (14.12.2007) அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், மகேஷ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசபை-நாகம்மா, இராஜறட்ணம் (சுகாதார பரிசோதகர், வெண்னப்புவ) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கேஸ்வரி, சிதம்பரநடராஜா (ஓய்வு பெற்ற ஆய்வுகூட உதவியாளர் அநுராதபுரம் மத்திய கல்லூரி), ரட்ணேஸ்வரி, ஞானேஸ்வரி, விஜயலக்ஷ்மி (வவுனியா), காலஞ் சென்ற மகாலஷ்மி, சிவகுமாரன், சங்கரநாதன் (கனடா), கலாநிதி (வவுனியா), நந்தகுமார் (ப.நோ.கூ.சங்கம், பருத் தித்துறை), கனகசபை (கணக்காய்வாளர், உதயன் பத்திரிகை நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், JP) ஜெயலஷ்மி, சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற உதவி விவசாய பணிப்பாளர், JP), முருகையா (தும்பளை), முருகையா(Globel Agency post office, வவுனியா), விமல றட்ணம் (உதவி அதிபர் யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), வேதநாயகி (கனடா), பஞ்சலிங்கம் (உரிமையாளர் வேணுகா ரெக்ஸ், வவுனியா), செல்வராணி, தேவிகா ஆகியோரின் அன்பு மாமனும், ஆறுமுகதாஸ்-கலைவாணி (ஜேர்மனி), அரவிந்ததாஸ்-கேதீஸ்வரி (ஜேர்மனி), மோகனதாஸ் (குவைத்)- துளசி (மன்னார்), சிவசக்தி (ஆசிரியை, புற்றளை மகா வித்தியாலயம்)-ஸ்ரீதரன் (சமுர்த்தி வங்கி, கரவெட்டி), தங்கேஸ்வரன் (ப.நோ.சங்கம்-பருத்தித்துறை)-றமணி (ஆசிரியை, தும்பளை யா/சிவப்பிரகாச மகா வித்தியாலம்) Dr.கனகசுந்தரம் - Dr றஜிதா (மன்னார்), ஜெயானந்தன் - கஜல்விழி (வவுனியா), காலஞ் சென்ற ஜெயகாந்தன் மற்றும் ஜெயசக்தி (ஆசிரியை, கலாமன்றம்,பருத்தித்துறை), சுஜந்தினி - சந்திரதாஸ் (லண்டன்), சுஜந்தன் (பொறியிய லாளர்) - சிவாஜினி (கனடா), கஜந்தன் (பொறியியலாளர், நீர்வழங்கல் சபை,கொழும்பு)-சுதர்சினி (ஆசிரியர்,றோயல் கல்லூரி, கொழும்பு), அஜந்தன் (கனடா), றமணன்-சசிரேகா (கனடா), ரமேஸ் (விவசாயபீடம், 3ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), அபிராமி, காண்டீபன் (1ஆம் வருடம், களனி பல்கலைக்கழகம்), சிந்திக்கா, சாளினி, சிலைதினி (கனடா), நிறஞ்சினி (வவுனியா), றம்ஜா, அனுஜா, தர்சன், தர்சனா, நிரூஜன் ஆகியோரின் அன்பு பேரனும் மற்றும் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.12.2007) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கனகசபை (மகன்)

### சிவராசா நல்லம்மா



ஏழலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா நல்லம்மா நேற்று (16.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராசாவின் அன்பு மனைவியும், தவமலர், பராசக்தி, பத்மராணி (ஆசிரியை ,இணுவில் இந்துக் கல்லூரி) , காலஞ் சென்ற செந்தில்வேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், சோமசுந்தரம், பாலசிங்கம், விஜயகுமார்,மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், அமுதா, விஜிதா, உதயணன், கமலா, பிரதீபன் (பலாலி ஆசிரியகலாசாலை) , குமுதினி,வசந்தினி (ஆசிரியை-சைவசண் மார்க்க வித்தியாலயம், ஏழாலை) ,அபர்ணா,சஞ்சீவ்,நயனா, கரன்ஜீவ், கேதரன், தர்சினி, சுபாசினி, கெளசினி, துளசினி, தனஞ்சயன், திலீபன், சாயிசா ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(17.12.2007) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத் தில் தனகஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவோடை,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (69070)

தகவல்:
குடும்பத்தினர்.

### அருணாசலம் முருகையா

(பிரபல வர்த்தகர், கொழும்பு)



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் முருகையா நேற்று (16.12.2007) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம்-சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமகம்-மாரிமுத்து தம்பதியினரின் மருமகனும், மீனாட்சியின் கணவரும்இராசதுரை (C.T.B),காலஞ் சென்றவர்களான இராசரத்தினம், கனகசபை, சுப்பிமணியம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், பாலகிருஸ்ணன்,முருகானந்தன் (Colombo), அருணேஸ்வரன் (France), கருணேஸ்வரன்(London), கணேசாணந்தன், சிவகரன்(கொழும்பு), சாந்தலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசி, தயாளினி, யசோதா, அனுசியா விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோரின்மாமனாரும், யஸ்ரிகா (மாணவி யா/இராமநாதன் கல்லூரி), பிரசாந்தன் (கொழும்பு), நிசாந்தன்(கொழும்பு), கிரிதரன்(கொழும்பு), பிரியங்கா (France), நட்சத்திரா(France), சந்தோஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(18.12.2007) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்க்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

'அன்னை இல்லம்'
தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு,
இணுவில். (69067)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org